உ

சிவமயம்

கலைநகர் சித்தன்கேணியைச் சேர்ந்த



# அமரர் நாமகள்தேவி தெண்டாயுதபாணி

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவுமலர்

05.12.2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

உதிரத்தை பாலாக்கி
உள்ளன் போடணைத்து
தலைநிமிர்ந்து நாம்
வாழ உன் தலை குனிந்து
கோவில் குளமென்று கும்பிட்டு
ஆளாக்கி வாழ்வுதந்த அன்னையே
அன்போடு பழகி நின்ற மாமியே
உம்மை இழந்து நாம் வருந்தியிங்கு
உள்ளம் சோர்ந்து போனாலும்
உம் நினைவாய்,
வாடமலராய் இம்மலரை - உம்
பாதாரவிந்தங்கள் வணங்கி
சமர்ப்பணம் செய்தோம்
ஏற்றிடுக - அங்கிருந்தும்
எமக்காசி பொழிந்திடுக.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



மலர்வு
22.08.1937

உதிர்வு
05.11.2003

# திருமதி நாமகள்தேவி தெண்டாயுதபாணி

**திதி நிர்ணயம்**

பன்னுநல் சித்திரப் பானுவாம் ஐப்பசியில்
துன்னும் துவாதசிச் சுக்கிலநாள் - இன்மொழிசேர்
நாமகள் தேவியன்னை நாதன்தாள் நாடியே
பூமிதனை விட்டாள் புரிந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## விநாயகர் காப்பு

ஓங்கார வடிவான உன்பாதத் தாமரையும்
உபய பரிபுர மறைகளும்
உதிக்கின்ற செங்கதிர்கள் ஒருகோடி நிகரொளியும்
உந்துள நீற்றின் ஒளியும்
பாங்கார் கஜானமும் முகமதியும் வளர்புயப்
பவளா சலங்கள் நான்கும்
பாசமுடன் அங்குசம் கொம்பேரி லட்டுகம்
பட்சமொடு வைத்த கரமும்
நீங்காத அருள்மாரி பொழியும்தி ரியம்பகமும்
நிறையும் மும்மத மாரியும்
நீள்சடா யடவியும்வெண் பிறையு மொரு தொந்தியும்
நெஞ்சில் ஒருகாலும் மறவேன்
காங்கேயன் மகிழ்தமய னேகங்கை நதிபெருகு
காசி வாழ்துண் டிராச
கணபதி எனும்பெரிய குணமேரு வேஅருட்
கருணா நிதிக் கடவுளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவ ரென்றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினு மனத்து மருவிநி ன் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர் பானீக்கி
நுழைதரு நூலினர் ஞானம்
கோயிலும் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே

## திருவாசகம்

வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தாழ் உறுபுனலில் கீழ்மே லாகப்
பதைத்துருகும் அவர்நிற்க என்னையாண்டாய்க்
உள்ளந்தாள் நின்றுச்சி யளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாம் கண்ணாய்அண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சம் கல்லாம்
கண்ணிணையும் மரமாந்தீ வினையி னேற்கே

## திருவிசைப்பா

ஒளிர்வளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவள ருள்ளத் தானந்தக் கனியே
அம்பல மாடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயத்
தொண்டனே விளம்புமா விளம்பே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும்பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவா ருலகில்
ஊரும் உலகும் கழற உளறி
உமைமண வாளனுக் காட்
பாரும் விசும்பும் அறியும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
வளப்பெரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொடு மூன்றுந்
திருந்து சாத்துவீக மேயாக
இந்துவாழ் சடையா னாடு மானந்த
வெல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துட் டினைந்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்

*********



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானுக் கிளையோனே கதிர்காமப் பெருமானே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க!
மலிவளம் சுரக்க! மன்னன்
கோன்முறை அரசு செய்க!
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க!
நற்றவம் வேள்வி மல்க!
மேன்மை கொள்சை வநீதி
விளங்குக உலக மெலாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் திருமதி
## நாமகள்தேவி தெண்டாயுதபாணி அவர்களின்
## வாழ்க்கைச் சுருக்கம்

ஈழவள நாட்டின் சிரமெனத் திகழ்வது யாழ்ப்பாணம். அதன் ஒரு பகுதியான வட்டுக்கோட்டையில் அமைந்துள்ள ஊர்களில் ஒன்றே கலைநகர். கலை மலியூரானதால் இவ்வூர் கலைநகர் என அழைக்கப்படலாயிற்று. பிள்ளையாரையும், குலதெய்வமாகிய கம்பம்பூலோக ஆதிவைரவரையும் வணக்கத் தலங்களாகக் கொண்டுள்ள சைவ மக்கள் வாழும் இவ்வூர் கலைகளோடு மட்டுமல்லாமல் சித்த வைத்தியத்திலுஞ் சிறந்ததாகவும் இருந்து வருகின்றது.

"சீர்பெறு சித்திரம் சிற்பம் சிறந்திடு
நல் சித்த வைத்தியம் " என்றும்

"கூத்தும் பாட்டும் குலவும் வட்டூர்"
எனவும்
போற்றப்படுவதாகும்.

சித்த வைத்தியத்தில் சிறந்து விளங்கிய வைத்திய கலாநிதியான அமரர் மு. வடிவேலு அவர்களுக்கும் வள்ளியம்மை அவர்களுக்கும் மூத்த வாரிசாக வந்துதித்தவரே நாமகள்தேவி நல்லாள். இம்மாது சிரோன்மணி தனது முப்பதாவது வயதில் வ.பி.போ.சபையில் திடீர் பரிசோதகராக விளங்கிய பொன்.தெண்டாயுதபாணி என்னும் நம்பியைக் கைத்தலம் பற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களின் இல்லற வாழ்விற்கு நலன்சேர்க்கும் வகையில் ஆசிரியர்களாக விளங்கும் நான்கு புதல்வர்களும் கஜேந்திரன் ( அ.த.க பாடசாலை, பெரிய புளியங்குளம், முல்லைத்தீவு), விஜேந்திரன் ( யா.இந்துக்கல்லூரி) , குலேந்திரன், இரவீந்திரன் என்பாரும், இரதிகலா (மருந்துக் கலவையாளர், மத்தியமருந்தகம், துணுக்காய்) , சூரியகலா, சந்திரகலா என மூன்று புதல்விகளும் வந்துதித்தார்கள். மூத்தவரான கஜேந்திரன் என்பவரை மல்லாவி போதனா வைத்தியசாலையில் உதவி வைத்திய அதிகாரியாக விளங்கும் ரேணுகா என்பவருக்கு மணமுடித்து வைத்தும், இரண்டாவது மகனாக விளங்கும் விஜேந்திரனை சமூக சேவைகள் திணைக்களத்தில் எழுதுவினைஞராகப் பணியாற்றும் நிர்மலா என்பவருக்கு மணம் முடித்து வைத்தும் இன்பங் கண்டார்கள்.

நாளும் நல்வாழ்வு கண்ட நாமகள் அன்னையார் திடீர் நோய்வாய்ப்படவே பிள்ளைகளும், நாயகரும் நலிவு கண்டார்கள். நாமகள்தேவி யன்னையின் நல்லுயிர் நீங்கவே சோகத்துடன் ஆத்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சி வேண்டி நிற்கின்றார்கள்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**சமாதானத்தின் சின்னமாக வெண்புறாவை அமைத்தவர் புதுமுறை ஓவியத்தின் தந்தை என்று சிறப்பிக்கப் படுபவரான திரு பபிலோபிக்காஸோ ஆவார்.**

**உயிரற்ற உடல் ஏன் நீரில் மிதக்கின்றது? சடலத்தின் அழுத்தத்தால் இடம்பெயரும் நீரின் நிறையும் சடலத்தின் நிறையும் சமமாக இருப்பதால்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணையுள்ளம் கொண்ட அன்புருவம் பிரிந்ததுவோ!

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

வள்ளுவன் வாக்கை நினைவு கூரத்தக்க வகையிலே தனது வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர் அமரத்துவமான அம்மை நாமகள்தேவி அவர்கள்.

யாழ் வட்டு வடக்கு சித்தன்கேணியை பிறப்பிடமாகவும் கொண்டு 1937 இல் மலர்வுற்ற நாமகள் தேவியையிட்டு சில வாழ்க்கை வரலாற்றை அறியத் தருவதிலே நாம் பெருமிதம் அடைகின்றோம்.

யாழ் மக்களின் வன்னி நோக்கிய இடம்பெயர்வோடு எமது அயலில் வந்து ஆறு ஆண்டுகள் அளவில் குடும்பத்தோடு வசித்த அமரர் நாமகள்தேவி ஓய்வு பெற்ற வடபிராந்திய திடீர் பரிசோதகர் பொன்.தெண்டாயுதபாணி என்பவரை மணமுடித்து ஒரு கௌரவமான குடும்ப வாழ்வை அனுபவித்துக் கொண்டிருந்தார். இவருக்கு அருமையான இந்திரன் என்ற பெயரில் முடிவடையும் நான்கு புதல்வர்களும் கலா என்ற பெயரில் முடிவடையும் புதல்விகளும் உள்ளனர்.இவர்களில் மூத்த கலா எமது ஸ்தாபனத்தில் மருந்துக் கலவையாளராக கடமைபுரிகின்றார். இதன்மூலம் ஏற்பட்டதே இவர்களது குடும்பத் தொடர்பு.

துணுக்காயில் ஆறு ஆண்டுகளுக்கு மேலாக இவர் வாழ்ந்த வாழ்க்கை மனோ உன்னதமானது. அவர்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியே சார்ந்திருக்கும் வதனமும் , கருணை பொழியும் கண்கள், அன்பொழுகப் பேதமின்றி அனைவரையும் ஆதரிக்கும் பண்பு என்பன அவரிடம் நாம் நேரடியாகக் கண்டு கொண்டவை. எம்முடன் தமது குடும்பத்தவர் போன்று பழகிய நாட்கள் மறக்க முடியாதவை. இது எமது வேதனையை மேலும் அதிகரிப்பதாக உள்ளது.

இக் கருணை உள்ளம் கொண்ட அமரர் நாமகள் தேவி இன்றும் தமது அன்புச் செல்வங்களோடு நீண்டகாலம் இன்பமாய்க் கழிப்பாள் என எதிர்பார்த்திருந்தோம். இப்படியிருந்த வேளையில் அவரது திடீர் மரணச்செய்தி கேட்டு ஒரு கணம் திகல் அடைந்தோம். அன்னாரது குடும்பத்திற்கு எவ்விதம் ஆறுதல் கூறுவது என்றறியாது சற்று வாயடைத்திருந்தோம்.அன்னாரின் கணவரும், அருமைச் செல்வங்களும் அன்பு மருமகள் மாரும் உறவினர்களும் எப்படித்தான் இத்துன்பத்தில் இருந்து ஆறுதல் காண்பார்களோ? என்ற வேதனை எம்மை வாட்டியது.

அமைதி காத்த அம்மையாரின் ஆத்மா அமைதியாகவே பிரிந்தது என்பது மனதிற்கு ஆறுதல் அளிக்கின்றது.

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வாரைப் பொறுத்தல் தலை"

என்பதைத் தம் வாழ்வில் குறிக்கோளாகக் கொண்டு மண்ணுலகில் நல்வழி நின்ற அவரின் ஆத்மா சாந்தியடையும் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை. இவரது மறைவில் துயருறும் அனைவரது துயரிலும் நாமும் பங்கு கொள்கின்றோம்.

துணுக்காய் மத்திய மருந்தக
வைத்திய பொறுப்பதிகாரி குடும்பமும்
ஊழியர்களும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவபதம் அடைந்த அமரர் நாமகள் தேவி தெண்டாயுதபாணி அவர்கட்கு அவரது அன்புச் சகோதரர் டாக்டர் மு.வ. கயிலாயநாதன்(சமாதான நீதிவான்) அவர்களின் அனுதாபச் செய்தி மடல்

## நீங்காத நினைவலைகள்

எமது பாசமிகு அன்புச் சகோதரி திருமதி நாமகள்தேவி அம்மையார் அவர்களினது மறைவுச் செய்தி கேட்டு ஐயுந்தெடர்ந்து விழியும் சொருகி அறிவிழந்து நடைப்பிணமாகி விட்ட எனக்கு அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாதது

எமது சிறுவயதில் தாயை இழந்து தனிமரமாக தவித்த பொழுது தாய்க்கு தாயாக அரவணைத்து நேசித்து அன்புடன் எங்களை சீராட்டி,தாலாட்டி பாசத்துடன் வளர்த்த என் சகோதரியை இனி எங்கு காண்பேன்

அன்பும் கருணையும் தயை உள்ளமும் கொண்ட உமது நல்லினிய குணங்களை இனிநான் எங்கு தேடுவேனோ நீங்கள் நல்ல குடும்பத்தலைவியாக நிறை பக்தியுடன் எங்கள் குலதெய்வமாகிய உச்சிஷ்ட கணபதிக்கு தொண்டு செய்ததும் சமூக நாட்டம் கொண்ட வீராங்கனையாகவும் பல்வேறு நற்பண்புகளைக் கொண்டு சீரும் சிறப்புமாக வாழ்ந்து வந்த உங்களது புன்சிரிப்பு வதனம் நினைவிழந்தது ஏனோ

உற்றார் உறவினரை மனமார வாழ்த்தி மனமகிழ்ந்து அரவணைத்த கரங்கள் இன்று துரம்பாகி விட்டனவோ

சித்தியும் சித்தி தரும்தெய்வமாகித்
திகழும் பராசக்தியும் பக்திதழைக்கும்
சிவமும் தவம் முயல்வார் முத்தியும்
முத்திக்கு வித்தும் வித்தாகி முளைத்து
எழுந்த புத்தியும் புத்தியினுள்ளே புரக்கும் புரத்தை

என்று அபிராமபட்டர் பாடியதற்கு இணங்க பிறப்பு இறப்பு முத்தி என்பன ஒன்றுடன் ஒன்று தொடர்புடையது

எமது சகோதரியின் ஆத்மா மறுபிறப்பில்லாது முத்தி பேறு பெற்று கணேசன் வாழ் உலகில் சாயுச்ச பதம் பெற்று தொண்டுகள் செய்து கொண்டு இருப்பார் என எல்லாம் வல்ல உச்சிஷ்ட கணபதியை உளமார பிரார்த்திக்கின்றோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தின் தலைமளாய்
குலத்தின் குலவிளக்காய்
தலத்தின் அரிய தவமகளாய்
பாசத்தின் உயிர் சகோதரியை
பாரினில் மறக்க முடியுமா

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

உயிர் பிரியா பாசமிகு சகோதரன்
**டாக்டர் மு. வ. கயிலாயநாதன்**
இல. 7 ஜம்பட்டா வீதி
கொழும்பு 13

**அமரர் நாமகள் தேவி தெண்டாயுதபாணி**
**அவர்களின்**
**நீங்காத நினைவலைகள்**

அன்று நாம்
வித்திலையை உதறிவிட்டு
வெறுந்தளிராய்
சிறுகொடியாய்
தத்தளித்திருந்தோம்
நீயும் சிறு செடிதான்
பெருங்கொம்பாய்
நாம் உயர துணைபுரிந்தாய்
இன்று நீ
பட்டுத்தான் போனாயே
பாசமிக்க கொடிகள் நாம்
வேறு வேறு கொம்பரங்களில்
தொங்கினாலும்
ஊன்று கோலாய் நீ
இருந்து எம்மை உயர வைத்த நன்றியினை
எம்வேருக்குள்ளேயே
தேக்கி விட்டோம் அக்காவை

உயிருக்குயிரான பாசமிகு
**சகோதர சகோதரிகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேருஜீ கிராம முன்னேற்றச் சங்கத்தின் இரங்கலுரை

ஆயுள்வேதவைத்தியர் அமரர் வடிவேலு அவர்களின் அன்பு மகளும், கலைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன். தெண்டாயுதபாணி ( திமர் பரிசோதகர் ) அவர்களின் அன்பு மனைவியான தெ.நாமகள்தேவி அவர்கள் 05.11.2003 புதன்கிழமை காலமானதை இட்டு எமது கிராம மக்கள் மிகுந்த கவலையடைந்துள்ளார்கள். இவர் ஒரு சிறந்த பண்பாளர். ளதெய்வ பக்தி கொண்டவர்.

இவருடைய கணவராகிய திரு பொன்.தெண்டாயுதபாணி எமது நிலையத்தில் உபதலைவராகவும், செயலாளராகவும், பொருளாளராகவும் பதவி வகித்து எமது நிலையம் சிறப்புற இயங்க முன்னின்று உதவியவர். இவருடைய சேவைக்கு அம்மையார் உறுதுணையாக இருந்துள்ளார்.

இவரது பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினருக்கும் ஆறுதல் கூறி அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிராரர்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

நேருஜீ கிராம முன்னேற்றச்
சங்கமும் சனசமூக நிலையமும்
கலைநகர்
சித்தன்கேணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபிராந்திய போக்குவரத்துச் சபை முகாமையாளரின் அஞ்சலியுரை

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. பொன்னையா தெண்டாயுதபாணி அவர்களை வ.பி.போ.சபை திடீர் பரிசோதகராகப் பணியாற்றிய காலம் தொடக்கம் இவரையும் இவரது குடும்பத்தினரையும் நன்றாகத் தெரியும். இவரிடம் கடமை உணர்வும், மற்றவர்களை அன்பாகவும் பண்பாகவும் நேசித்து மதித்து பழகுவதிலும் சிறந்து விளங்கினார். இவரது குடும்பம் கல்வித்துறையிலும் விளையாட்டுத்துறையிலும் சிறந்து விளங்கி மக்களின் நன்மதிப்பையும் பெற்றார்கள் . இவரின் மனைவியார் இறந்த செய்தியை ஏழாம் திகதி பிரசுரித்த உதயன் பத்திரிகை மூலமாக அறிந்தேன். எனது குடும்பத்தின் சார்பில் கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

சு.மணிவாசகர்
பொது முகாமையாளர்.
வ.பி.போ. சபை
கோண்டாவில்

பலவீனர்களின் பாதையில் தடையாக இருந்த கருங்கல் பாறை பலசாலியின் பாதையில் படிக்கட்டாக அமைகின்றது (ஜேர்மனியக் கவிஞர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி நாமகள்தேவி தெண்டாயுதபாணி

அவர்களின் பிரிவிற்கான இரங்கற் செய்தி

கலைநகர் சித்தன்கேணியை வசிப்பிடமாகக் கொண்ட தெண்டாயுதபாணி குடும்பத்தினரின் குடும்ப விளக்காக இருந்த திருமதி நாமகள்தேவி தெண்டாயுதபாணி காலமான செய்தி கேட்டு எமது மன்றத்தினர் மிகுந்த கவலை அடைந்துள்ளனர். இவர் ஒரு சிறந்த பண்பாளர். இறைபக்தி கொண்டவர். இவருடைய குடும்பம் எமது மன்றத்திற்கு பல வழிகளில் ஒத்துழைப்பு நல்கியுள்ளது.

எமது தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் உருவாகியது முதல் அதன் ஈடிணையற்ற வளர்ச்சிக்கு இவருடைய குடும்பம் பெரிதும் உதவியுள்ளது. அதாவது திரு தெ.கஜேந்திரன் தலைவர், செயலாளராகவும் கடமைபுரிந்து திறம்படச் செயற்பட்டார். திரு தெ.விஜேந்திரன் உபதலைவர், உபசெயலாளராகவும் இருந்து வழி நடத்தினார். மற்றும் திரு தெ.குலேந்திரன், திரு தெ.இரவீந்திரன், செல்விகள் தெ.ரதிகலா, தெ.சூரியகலா, தெ.சந்திரகலா ஆகியோர் அங்கத்தவர்களாகவும் இருந்து எமது மன்றத்தின் வளர்ச்சிக்கு உந்துகல்லாக விளங்கினர்.இவர்கள் விளையாட்டுத்துறையில் எமது மன்றம் வெற்றியீட்டுவதற்கு வழி கோலினர்.

அத்துடன் எமது கிராமத்தில் இடம்பெறும் பலநிகழ்வுகளில் முன்னின்று செயற்பட்டனர். இப்படியாக இருந்து செயற்பட்ட குடும்பத்தினரின் ஒளிவிளக்காக விளங்கிய தாயாரின் பிரிவால் வாடும் அவர்களது குடும்பத்திற்கு ஆறுதல் கூறுவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை மண்டாடுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும்
விளையாட்டுக் கழக அங்கத்தவர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பொ.த (சாதாரணதர) கணிதத்தில் பயிற்சி வினாக்கள் சில உங்களுக்கு

1. முதல் 15 ஒற்றை எண்களின் கூட்டுத்தொகையை இலகுவான முறையில் கணிக்க.

2. Sin ( 90 - a ) = Cos a என்பதை நிறுவுக. (வாய்ப்புப் பார்க்க)

3. மோட்டார் கார் ஒன்றின் கதி துவிச்சக்கர வண்டி ஒன்றின் கதியிலும் 18 Km/h கூடியது. இவை 12 Km தொலைவில் ஒன்றையொன்று நோக்கி வர ஆரம்பித்தன. அவை சந்திக்க 12 நிமிடங்கள் எடுத்ததாயின் அவற்றின் கதிகளைக் காண்க.

4. ஒரு மாணவன் தான் ஆரம்பத்தில் வைப்பிடும் பணத்தில் ரூபா 50 கூடுதலாக ஒவ்வொரு மாதமும் இடுகின்றான். இவன் ஆரம்பத்தில் இட்டபணம் ரூ 200.00 ஆகும். இவன் 10 மாத முடிவில் வைப்பின் மூலம் பெறும் தொகை எவ்வளவு?

5. 6 % பங்குலாபம் தரும் கம்பனியில் ரூபா 10பங்குகளைச் சமத்திலும் 10 % கூடுதலான விலையில் ஒருவர் வாங்குகின்றார். இதனால் அவருக்குச் செலவான பணம் ரூபா 44000.00 ஆகும் எனின் அவரது வருமானம் யாது?

6. இரு இலக்கங்களைக் கொண்ட எண் ஒன்றின் அதன் இரு இலக்கங்களினதும் கூட்டுத்தொகை 13ம் அவ்வெண்ணை இடம்மாற்றி எழுதுவதால் பெறப்படும் எண்ணானது முன்னைய எண்ணைவிட 9 இனால் குறைவாகும். மூல எண் யாது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. 2 a அலகு நீளமுள்ள சமபக்க முக்கோணி ஒன்றை பயன்படுத்தி $30^\circ, 60^\circ$ என்பவற்றின் sin , cos , tan பெறுமானங்களைப் பெறுக?

8. a அலகு நீளமான செங்கோணத்தைக் கொண்ட பக்கங்களுடைய இரு சமபக்க செங்கோண முக்கோணி ஒன்றைப் பயன்படுத்தி 45 பாகைக்குரிய sin , cos , tan பெறுமானங்களைப் பெறுக?

9. 12.14 $(1 / 5.48^2 - 1/ 3.21^2)$ என்பதன் பெறுமானத்தை மடக்கை வாய்ப்பாட்டைப் பயன்படுத்திக் கணிக்க.

10. A என்னும் அவதானிப்பு நிலையம் ஒன்றிலுள்ள நோக்குனர் ஒருவர் $040^0$ திசைகோளில் 60 m தூரத்தில் பாடசாலை ஒன்றையும், அதே இடத்தில் இருந்து $320^0$ திசைகோளில் 50 m தூரத்தில் விடுதி ஒன்றையும் அவதானிக்கின்றார். இதன் அளவிடையை 10 m = 1 cm எனக் கொண்டு

1. அளவிடை வரிப்படத்தை வரைக?

2. இரு இடங்களிற்கும் இடைப்பட்ட தூரத்தைக் காண்க?

11. 1. n ( AuB ) = n (A) + n(B) - n ( AnB) என்னும் சமன்பாட்டை சரியென வாய்ப்புப் பார்க்க?

11 . P (A) =1/5 எனின் P (A') ஐக் காண்க
(இங்கு A என்பது ஒரு தனி நிகழ்ச்சி ஆகும் )

12. ஒரு நேர்கோட்டில் அமையாத நிலையான மூன்று புள்ளிகள் A , B , C ஆகும். இவற்றிற்கு சமதூரத்தில் இருக்கும் புள்ளி 0 ன் ஒழுக்கை அமைக்க.

தொகுப்பு

**தெ. ரவீந்திரன் (ஆசிரியர் )**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்களின் அன்புத் தெய்வமாகவும், நல்வழி காட்டியாகவும் எங்களோடு இரண்டறக் கலந்து வாழ்ந்து நின்று எங்களைப் பிரிவுத் துயரில் ஆழ்த்தி விட்டு இறைவனடி சேர்ந்த எங்கள் தாயாரின் பிரிவுத் துயரின் போது அருகில் இருந்து ஆறுதல்மொழி கூறியோருக்கும், அன்புக்கரம் நீட்டி அரவணைத்த அன்புள்ளங்களுக்கும், வெளிநாடுகளில் இருந்தும், அயலூர்களில் இருந்தும் தொலைபேசி மூலமும், நேரிலும், தபால்மூலமும் அஞ்சலிச் செய்திகள் அனுப்பியோருக்கும், மலர்வளையம் சாற்றி அஞ்சலி செய்தோர்க்கும், இன்னும் பல வழிகளில் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் பல கருமங்களின் மத்தியிலும் அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய வைபவங்களில் கலந்து கொண்டுள்ளவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

இங்ஙனம்

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வடிவேலு**
+
**வள்ளியம்மை**

சண்முகநாதன்
சிவகணேசன்
நாமகள்தேவி
முருகநாதன்
கையிலாயநாதன்
சிதம்பரநாதன்
செல்வநாயகி
சித்திதேவி
அன்னநாயகி
அம்பலநாதன்

**பொன்னையா**
+
**சின்னம்மா**

தெண்டாயுதபாணி

நாமகள்தேவி + தெண்டாயுதபாணி

கஜேந்திரன் + ரேணுகா
விஜேந்திரன் + நிர்மலா
குலேந்திரன்
ரவீந்திரன்
ரதிகலா
சூரியகலா
சந்திரகலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ உ



# கீதாசாரம்

- எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
- எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
- எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
- உன்னுடையது எதை இழந்தாய் எதற்காக நீ அழுகிறாய்?
- எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
- எதை நீ படைத்திருக்கிறாய், அது வீணாகுவதற்கு.
- எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
- எதை கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
- எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொருவருடையதாகிறது.
- மற்றொரு நாள் அது வேறொருவருடைதாகும்.
- இந்த மாற்றம் உலக நியதியாகும்.

Pillaiyar

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org